


Vol.27 | No. 3 | March 2023

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

BASIC THEOLOGICAL COURSE, CATECHISM





WORLD SICK DAY, NEYYOOR HOSPITAL, 11.02.2023



MATHAR JOTHIS, HALF DAY SEMINAR, KALIYAL & ARUKANY FORANES AT KALIYAL, 26.02.2023



PRIESTS' ORIENTATION PROGRAMME, SANGAMAM, 06-07.02.2023



PRESBYTERAL COUNCIL MEETING, SANGAMAM, 25.02.2023

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 27 No :03 MARCH 2023



# இறையருள்
# IRAIARUL


## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

DTP & Design

**M.R.Merin Sujith**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**


## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| மறைமாவட்ட கூரியா செய்திகள் | 07 |
| மறைக்கல்வி | 08 |
| மிஷன் லீக் இயக்கம் | 11 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 12 |
| இல்வாழ்வு இயக்கம் | 15 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 17 |
| கன்னியாகுமரி சமூக சேவை சபை | 18 |
| வின்செண்ட் தே பவுல் சங்கம் | 21 |
| நலவாழ்வு பணிக்குழு | 23 |
| தக்கலை இளையோர் கல்வி பணியகம் | 24 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 26 |
| மறைமாவட்ட செய்திகள் | 27 |
| தென்காசி மறைபரப்புதள செய்திகள் | 29 |
| மறைவட்ட செய்திகள் | 30 |
| MONTHLY AGENDA - MARCH 2023 | 36 |
| BISHOP'S ENGAGEMENTS | 39 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/143/2023**

**28 February 2023**

**Dear Readers,**

Greetings and prayerful wishes Bishop‟s House, Thuckalay!

We have entered the holy season of Lent on 20 February 2023 – a time to prepare ourselves to reflect on the suffering, passion, and death of Jesus Christ. At the beginning of his public life, Jesus fasted and prayed for 40 days and 40 nights. We observe the Lenten season, recalling this event. Lent can be viewed as a time of grace given to us by God in order to live that aspect of the Christian life known as a "change of heart" in a more deliberate and conscious manner. It is also a time to focus on our identity. Searching for our identity is part of life. Identity involves discovering who we are as persons and what our role is by answering these questions: Who am I, and why am I here? Growth in our awareness of our Catholic identity is a lifelong process that shifts as we change. It is rooted in baptism, where we are transformed into our true identity as sons and daughters of the Father. St Paul, in his Letter to the Ephesians, challenges us to put away our former lives and put on the new self. In other words, he tells us to turn from our sinful ways and take on our new life in Christ. In so doing, we become one with Christ, where we find our true identity. We accept this challenge during Lent as we journey with Christ through life‟s difficulties to eternal life.

In our Syro-Malabar Church, the observance of Lent begins on Monday after the Sunday called pethurtha with the celebration of the penitential service of putting ashes in the form of a cross on the forehead. The Syriac word pethurtha means „looking back‟ or „repentance‟. Real repentance is the result of deep faith in God. Faith is expressed through works of charity. Our faith in God must enable us to do acts of charity and to love God and love one another.

Faith without works is dead. That is why St James says in his letter, “faith by itself, if it has no work, is dead” (James 2:17). The last part of the Prayer of the Faithful during Lent, “Help us to observe this Lenten season with sincere prayer, brotherly love, and self-sacrifice,” reminds us to meditate upon three important aspects of the season of Lent and put them into practise in our daily lives. I know you have heard them a number of times. But it is essential that we discuss them at the beginning of every Lenten season so that we are able to make good use of this holy time of grace.

In the first place, we must be in constant communion with God through prayer. One of the main purposes of Lent is to be with God. This is possible only through deep personal prayer. Some of the types of prayer are meditation, repetitive prayer, and congregational prayer. Meditation is a form of personal prayer that consists in closing the eyes and ears of the mind to all else, except the object of one"s devotion. For us Catholics, this object of devotion is God or Jesus Christ. At prayer time, our speech is addressed to ourselves and is intended to shake off our listlessness. Some of us are intellectually aware of God. 2 Nobody has ever seen God face-to-face. We desire to realise Him and become one with Him through meditation.

Repetitive prayer is another form of personal prayer. Constant repetition of a word-symbol connoting God or whatever aspect of it appeals to one with concentration till it results in such a silence of intellect, will, and feeling that the divine Word can be uttered within the soul It should be part of our spiritual exercises. If the word is simply repeated as a whole and not broken up or undone by discursive analysis, the fact for which the word stands will end up presenting itself to the soul in the form of an integral intuition. For us Catholics, this word could be Jesus or phrases like “Jesus I love you,” “Jesus, son of David, have pity on me,” “My Lord and My God,” etc.

Among all the different types of congregational prayers, the most pleasing and acceptable form of prayer to God is the Holy Qurbana. We are all called to the common priesthood of Christ through baptism. Therefore, it is a privilege for us as baptised Catholics to participate with greater awareness and knowledge in the celebration of the Holy Qurbana, offered by the priest who shares in the ministerial priesthood

of Christ. Regarding the participation of the people in Holy Qurbana, Vatican II teaches: “For this reason, the Church, therefore, earnestly desires that Christ‟s faithful, when present at the mystery of faith, should not be there as strangers or silent spectators. On the contrary, through a good understanding of the rites and prayers, they should take part in the sacred action, conscious of what they are doing with devotion and full collaboration” (SC 48).

During this holy season of Lent, let us make a firm commitment to participate in the Holy Qurbana with greater devotion. The best way to express our love for the Church is to participate genuinely in the Holy Qurbana, as the Church is built on the foundation of the mysteries of the Holy Qurbana. That is why the Fathers of the Church taught us: “Eucharist makes the Church.” When the faithful genuinely love Holy Qurbana, they love the Church. This love for the Holy Qurbana and the Church is love for Jesus Christ because the Church is his mystical body and he is its head.

Besides, the Holy Qurbana, during this season of Lent, let us be more fervent and regular in our daily family prayer. As followers of Christ, our unity and love are manifested when all the members of the family gather on their knees to recite the Rosary, read portions from the Holy Bible, and invoke God‟s blessings upon each member of the family. It is said that a family that prays together stays together. I also urge everyone to find some time, either in the morning or before retiring to bed, for personal meditation. Our quiet moments can bring about much-needed changes in our lives. Let us remember that our daily family prayers and other forms of personal prayer are extensions of the Holy Qurbana.

The second aspect of this season of Lent is the practise of charity. We can manifest our Christian life through our love for one another. I wish to bring to your attention just one aspect of love, namely, forgiving love. Let us pray for the gift of forgiveness for those who harm us, for those who do not like us, and for those whom we consider our enemies. It is essential that we forgive others in order that our prayers may be acceptable to God and our mistakes be forgiven. The Lord says: “If you do not forgive others, neither will your Father forgive your trespasses” (Mt 6:15). How much love and affection have we received from others on numerous occasions in

the past, and yet how few people hate us and work against us? Let us forgive them and pray for the gift of forgiveness for them and for us.

When we meditate on the forgiving nature of love, it is good to focus on the sacrament of reconciliation. It is a sacrament that reconciles us with God, with one another, and with ourselves. Frequent confession not only obtains remission for our sins but also helps and strengthens us to overcome temptations and 3 avoid occasions of sin. Approaching the sacrament of confession as a family is something praiseworthy. As we encourage our youth to frequent this sacrament, we should also instil in them the importance of prayer and sacrifice, the core values of Lent. I advise all of you to make a good confession during this holy season of Lent so that we can worthily take part in the Easter celebrations that culminate this season.

The third aspect of this season of Lent is self-sacrifice. The suffering and death of Jesus on the cross were a sacrifice for the remission of our sins and the sins of the whole world. We, who participate in the same sacrifice offered by the Lord Jesus, must become like Jesus and cultivate the same attitude as that of Jesus. St Faustina reminds us of this when she teaches us to pray the Divine Mercy Chaplet. The trials and tribulations of our daily lives have a redemptive value in the sight of God. If we realise this and accept them for the good of our family, our community, and our Church, then we become truly blessed. Sacrifice also implies fasting. It does not mean merely giving up certain types of food items. In fact, true fasting is "tearing one"s heart and returning to God" with true repentance for one"s sins (Joel 2:13). It is "breaking unjust fetters, freeing the oppressed, sharing one"s bread with the hungry, clothing with the naked, and a home with the homeless, and not turning away from the needy relatives" (Is 58:6-7). During this season of Lent, as pastors, we can help our faithful make some tangible sacrifices, like giving up smoking if they are smokers, giving up drinking if they indulge in alcohol, giving up some items from their daily intake of food, etc., and contributing the proceeds thereof for the welfare of some needy people in our neighbourhood. It is also a useful practice to put more effort and energy into our work during this season because work is a means of taking part in the creative work of God.

The Church, during this Lenten period, exhorts us to subdue our carnal desires and overcome temptations through fervent prayer and fasting, penance, and almsgiving. Jesus Christ, who overcame the temptations unleashed by the Evil One through prayer and fasting, should become our model. The season of Lent invites us to reject the path of sin and follow the path of salvation by worthily receiving the holy sacraments that Jesus instituted for us. As mentioned earlier, it is through wholehearted participation in meditation, repetitive prayer, the Holy Qurbana, reading and meditating on the Sacred Scripture and receiving the sacrament of reconciliation that we are able to free ourselves from the bondage of sin and grow spiritually. Let our prayers, acts of penance, and all other good works help us open a new path to get closer to God and our fellow human beings. Through a meaningful observation of Lent, let us prepare ourselves to enjoy the peace and happiness of the risen Lord.

As we have already reflected, we are preparing ourselves for the great feast of the Resurrection. In the beginning of next month, we will be entering Holy Week, remembering and celebrating the Lord‟s Passion and Death. Death precedes resurrection. Our bodies will undoubtedly perish one day. But our faith says we will participate in the resurrection of our Saviour. St Paul declares, "All of us who were baptised into Christ Jesus were baptised into his death" (Rom 6:3). Even when living in our bodies, we are called to die. As disciples of the Lord, we are to take up our daily cross (Lk 9:23). Our former selves will be crucified with the Lord (Rom 6:6). We must live as if we have died to sin (Rom 6:2).

During this season of Lent, may I wish all of you, dear Fathers, a blessed time of spiritual journey with the Lord, into the desert and also towards Jerusalem, where we will join with him in his passion, death, and resurrection.

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

With my prayers and blessings,

☨ George Rajendran SDB
Bishop of Thuckalay

## மறைமாவட்ட கூரியா செய்திகள்

அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் ராமேஸ்வரம் பகுதியில் அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் அவர்களோடு மறைபரப்பு பணிகளில் உதவியாக செயல்படுவார்.

தேனி திருத்தொண்டு நிலையத்தின் உதவி இயக்குநராக அருட்தந்தை ஜேம்ஸ் அயலில் (காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

அருட்தந்தை ராக்கி குளங்கரா MCBS, செங்கோட்டை அன்பு இல்லத்தின் இணை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## Christmas Cover Contributions List 2022

1. Arukani
2. Mezhacode
3. Chempagatharisu
4. Bengiri
5. Kuttaicode
6. Malaicode
7. Manjalumoodu
8. Thettivilai
9. Chenamcode
10. Kaliyal
11. Karode
12. Munchirai
13. Varuthattu
14. Athencode
15. Kazhuvanthittai
16. Kuzhithurai (Kallukatti)
17. Marthandam
18. Padanthalumoodu
19. Thettiyode
20. Kudukachivilai (Fathimapuram)
21. Killiyoor
22. Mathapuram
23. Palapallam
24. Pilankarai
25. Thakkalivilai
26. Kattathurai
27. Nagercoil
28. Paraicode
29. Thadikarankonam
30. Thuckalay
31. Puliyarai
32. Theni - Chinnamanur
33. Thirparapu
34. Cumbum

**Fr. Johnsilal, Finance officer**




“உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.”
(மாற் 16:15)

## *“நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன” [உரோமையர் 10:15]*

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

### *விவிலியக் கலைவிழா - தென்காசி மறைபரப்புதளம்*

மறைக்கல்வி 2022 – 2023 ஆம் ஆண்டு தென்காசி மறைபரப்புதளம் விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகள் 2023 பிப்ரவரி 12 ஞாயிற்றுக்கிழமை புதூர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடத்தப்பட்டது. பிற்பகல் 1.00 மணிக்கு பெயர் பதிவைத் தொடர்ந்து 1.45 மணிக்கு தென்காசி மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்களின் தலைமையில், தொடக்க விழாவானது ஆரம்பமானது. நிகழ்வில் மறைக்கல்வி மாணவிகள் இறைவணக்கப் பாடல் பாடினர். தென்காசி மறைபரப்புதள செயலாளர் அருட்சகோதரி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ஆசிரியர் திரு. எட்வின்சன் அவர்கள் போட்டி விதிமுறைகளைப் பற்றி எடுத்துரைத்தார்.

கலைப்போட்டிகள் அனைத்தும் 3 அரங்குகளில் வைத்து பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெற்றது. தென்காசி மறைவட்டத்திலுள்ள 5 பங்குகளிலிருந்து 45 மாணவர்கள் போட்டிகளில் கலந்துக்கொண்டனர். இறுதி விழாவில் இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்கள் அனைவரையும் வாழ்த்தி உரை நிகழ்த்தினார். மேலும் தென்காசி மறைபரப்புதள புதிய ஊக்குவிப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. எட்வின்சன் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். தென்காசி மறைபரப்புதள மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். நிறைவு விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும் பேரருட்தந்தை பிலிப் கொடியந்தற அவர்களின் நினைவாக நற்செய்தி நிலையத்திலிருந்து வழங்கப்பட்ட சுழற்கோப்பை இவ்வருடம் அதிக புள்ளிகள் பெற்ற புளியறை சிறுமலர் மறைக்கல்வி நிலையத்திற்கு வழங்கப்பட்டது. 2 மற்றும் 3- வது இடம் பெற்ற மறைக்கல்வி நிலையங்களுக்கு புதூர் மெட்ரிக் பள்ளிக்கூடத்திலிருந்து வழங்கப்பட்ட சுழற்கோப்பைகளும் வழங்கப்பட்டன.



***தென்காசி மறைவட்ட விவிலியக் கலைவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் தரவரிசை பட்டியல்.***

| Parish | Points | Rank |
|---|---|---|
| St.Little Flower Sunday School, Puliyarai | 118 | 1 |
| St. Mary Sunday School, VanjiNagar | 93 | 2 |
| St. George Sunday School, Mekkarai | 82 | 3 |
| St. Thomas Sunday School, Pudur | 6 | 4 |
| Amala Mariya Sunday School, Thenkasi | 4 | 5 |

***மாணவர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டுதல் மற்றும் திறன் வளர் பயிற்சி***

மறைக்கல்வி வகுப்பு 10,11,12 படிக்கின்ற மாணவர்களுக்காக வாழ்க்கை வழிகாட்டுதல் மற்றும் திறன் வளர் பயிற்சி, நற்செய்தி நிலையத்தின் சார்பாக தக்கலை இளையோர் கல்வி பணியகம் (TYES) மற்றும் தோன் போஸ்கோ வழிகாட்டி குழுவினரும் இணைந்து பிப்ரவரி 18 சனிக்கிழமை மறைவட்டங்களில் வைத்து மறைகல்வி இயக்குநர் அருட்தந்தை.அபிலாஷ் சேவியர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளை மறை வட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு படந்தாலுமுடு திருஇருதய ஆலயத்தில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையும்.

ஆறுகாணி, மஞ்சாலுமூடு மற்றும் களியல் மறைவட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு உத்திரங்கோடு ஓசானாம் உயர் கல்வி நிறுவனத்தில் வைத்து காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையும் தக்கலை - பிலாங்காலை மற்றும் சூசைபுரம் மறை வட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு கல்லுவிளை, SMYM அலுவலகத்தில் வைத்து பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 4.00 மணி வரையும் வகுப்புகள் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்புகளில் 10,11,12 வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### மறைமாவட்ட விவிலிய வினாடி வினாப்போட்டி

2022 – 2023 ஆம் மறைக்கல்வி ஆண்டு வகுப்பு 5 முதல் வகுப்பு 12 வரையுள்ள மாணவர்களுக்கான மறைமாவட்ட அளவிலான விவிலிய வினாடி வினாப்போட்டி 2023 பிப்ரவரி 19 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை படந்தாலுமூடு திருஇருதய மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடத்தப்பட்டது. பங்களவில் நடைபெற்ற விவிலிய வினாடி வினாப் போட்டியில் முதலிடம் பெற்ற 455 மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்து கொண்டனர்.



### மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான அடிப்படைப் பயிற்சி முதல் பிரிவு வெற்றிகரமாக முடிந்தது. 2 ஆவது பிரிவு மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகள் பிப்ரவரி 26 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமானது. ஒவ்வொரு வாரமும் வகுப்புகள் ஞயிற்றுக்கிழமை திருஇருதய ஆலய அரங்கில் வைத்து காலை 10.30 மணி முதல் 4.30 மணிவரை நடைபெறும். இப்பயிற்சி வகுப்புகள் 6 ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். தகுந்த தயாரிப்புடன் அருட்தந்தையர்களால் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சியின் 2 ம் கட்ட வகுப்பில் 60 ஆசிரியர்கள் கலந்து கொள்கின்றனர்.

**அருட்தந்தை. ஜேக்கப் ஐயம்மாத்ற** — **இணை இயக்குநர்**

**அருட்தந்தை.அபிலாஷ் சேவியர்** — **இயக்குநர்**

# மிஷன் லீக் இயக்கம்

சிறுமலர் MISSION LEAGUE

## *பவளவிழா நிறைவு நன்றி கூட்டம்*

சிறுமலர் மிஷன்லீக் இயக்க பவளவிழா நிறைவு நன்றி கூட்டம் 2023 பிப்ரவரி 19 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு, படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் மறைமாவட்ட தலைவர் திரு. அஜு தோமஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மிஷன் லீக் இயக்குனர் அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தேசிய தலைவர் திரு. பினோய் பள்ளிப்பறம்பில் அவர்கள், பவளவிழா நிறைவு நமது மறைமாவட்டத்தில் மிகச்சிறப்பாக நடத்தியதற்காக மறைமாவட்டம் முழுமைக்கும் நன்றி கூறினார்கள். ஜூபிலி கொண்டாடும் அளவுக்கு சிறுமலர் இயக்கம் வளர்ந்துள்ளது என்றும், இயக்க வளர்ச்சி நிலைகள் பற்றியும் எடுத்துக்கூறினார்கள். தேசிய செயலர் திரு.சுஜி புல்லுக்காட் அவர்கள் பேசும்போது, எல்லா மறைமாவட்டங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற அளவுக்கு அதிகமாக உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பித்தது மிகவும் நன்றாக அமைந்தது என்றார். மேலும், நல்ல முறையிலான ஒருங்கமைவு, அனைவருடையவும் பங்கேற்பு குறிப்பாக மேதகு ஆயர்களின் பங்கேற்பு அவர்கள் மிஷன்லீக் இயக்கத்தை நேசித்ததன் அடையாளமே என்றார். இவ்வளவு பெரிய விழா தக்கலையில் நடைபெற இறைவன் அருள் பொழிந்துள்ளார் என்றும் கூறினார்கள். பின்னர் விழா பற்றிய மதிப்பீடு செய்யப்பட்டது. இறையழைத்தலின் விளைநிலமாக மிஷன்லீக் இயக்கம் வளர்ந்து வருகிறது என்று கூறியதோடு ஆயர், மறைவட்ட இயக்குநர்கள், பொறுப்பாளர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி கூறினர். தேசிய பொறுப்பாளர்கள் ஆயர் அவர்களுக்கும் இயக்குநர் தந்தை அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் நினைவுப்பரிசு வழங்கினார்கள். இறுதியாக தந்தை அவர்களின் நன்றியுடன் இறுதி ஆசீர் வழங்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.



**அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ்**
**இயக்குநர்**

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### ஊக்குவிப்பாளர்களுக்கான கூட்டம்

தக்கலை மறைமாவட்ட அலகு மற்றும் மறைவட்ட ஊக்குவிப்பாளர்களுக்கான கூட்டம் 2023 பிப்ரவரி 04 சனிக்கிழமை, கல்லுவிளை SMYM அலுவலகத்தில் மதியம் 2.30 மணியளவில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட செயலர் மெரின் சுஜித் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் இளையோர்களின் தற்போதைய மனநிலை குறித்தும் அடுத்து நடைபெற உள்ள வருடாந்திர தியானம் குறித்தும் விளக்கி கூறினார். இக்கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. இளையோர்களுக்கான தியானம் 2023 ஜூன் 16,17,18 ஆகிய நாட்களில் நடத்தவேண்டும்.
2. தியானத்தில் எல்லா இளையோர்களும் பங்கேற்க ஊக்குவிப்பாளர்கள் முயற்சி எடுக்க வேண்டும்.
3. மறைவட்ட ஊக்குவிப்பாளர்கள் தங்கள் மறைவட்டங்களில் இளையோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
4. இதன் ஒருங்கிணைப்பாளராக அருட்சகோதரி அமலா FCC, துணை ஒருங்கிணைப்பாளராக அருட்சகோதரி சோனா SH மற்றும் அருட்சகோதரி டீனா SABS ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
5. பிப்ரவரி 13 முதல் 28 ம் தேதி வரை இதன் வெற்றிக்காக செபிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியில் இயக்க கீதத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.

### தொடர் உருவாக்கல் பயிற்சி வகுப்புகள்

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் நடுவண் செயற்குழு மற்றும் தலைமைத்துவப் பயிற்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வலர்களுகான பயிற்சி 2023 பிப்ரவரி 12 ஞாயிற்றுகிழமை, மதியம் 2 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் ஜெபம் செய்து நிகழ்வை தொடங்கி வைத்தார். திருச்சி டோன் போஸ்கோ வழிகாட்டி

இயக்குனர் அருட்தந்தை அருள் ஆண்டனி SDB அவர்கள் இந்நிகழ்வை வழிநடத்தினார். இதில் அடுத்து வரவிருக்கின்ற நிகழ்வுகளுக்கான பயிற்சி மற்றும் அதற்கான தரவுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இறுதியில் தக்கலை மறைமாவட்ட துணை தலைவர் அஞ்சனா அனைவருக்கும் நன்றி கூறினார். பயிற்சி வகுப்பில் மறைமாவட்டத்தை சார்ந்த 12 இளையோர்கள் கலந்து கொண்டனர்.

### ***ஆறுகாணி மறைவட்ட இளையோர் சந்திப்பு***

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் ஆறுகாணி மறைவட்ட இளையோர் சந்திப்பு நிகழ்ச்சி 2023 பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஆறுகாணி திருக்குடும்ப மறைவட்ட ஆலய வளாகத்தில் மதியம் 1:30 மணிக்கு பெயர் பதிவுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து 2 மணியளவில் ஆறுகாணி ஆலய இளையோர்கள் இறைவணக்கம் பாடினர். தக்கலை மறைமாவட்ட தலைவர் மெர்பின் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து ஆறுகாணி மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை டோஜி அவர்கள் தொடக்க உரையாற்றினார். மறைமாவட்ட SMYM இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் “இளையோர் மனதில் இயேசு” என்ற தலைப்பில் இளையோர்களின் நம்பிக்கை வாழ்வை அடிப்படையாகக் கொண்டு வகுப்புகள் நடத்தினார். அதைத் தொடர்ந்து மறைமாவட்ட இணைத் தலைவர் ஜாஸ்மின் அவர்கள் “இன்றைய சமூகத்தில் இளையோர்கள்” என்ற தலைப்பில் மிகவும் கலகலப்பான முறையில் விவாதம் நடத்தினார். அதைத் தொடர்ந்து மறைமாவட்ட ஆலோசகர் ஜெசின் “தற்போதைய சமூகத்தில் வேலை வாய்ப்புகள்” என்ற தலைப்பில் வேலையின்மை பற்றியும் அதை மாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்தும், சமூகத்தில் உள்ள வேலைகளை



எவ்வாறு கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும் என்பதை குறித்தும் வகுப்புகள் நடத்தினார். இறுதியில் ஆறுகாணி மறைவட்ட SMYM தலைவர் பிரபின் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். பின் இயக்க கீதத்துடன் நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆறுகாணி ஆலய SMYM உறுப்பினர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

***அலகு சந்திப்பு***

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் தற்போது பங்களவில் செயல்படும் அலகுகளைப் பார்வையிட்டு வருகின்றனர். ஞாயிற்றுகிழமைகளில் அந்தந்த பங்குகளில் திருப்பலியில் பங்கேற்று அலகு சந்திப்பு நடைபெற்று வருகிறது. 19.02.2023 அன்று ஆறுகாணி, பத்துகாணி மற்றும் நெட்டா ஆலயத்திலும், 26.02.2023 அன்று மாங்கரை, சூசைபுரம் மற்றும் பிலாங்கரை ஆலயங்களிலும் அலகு சந்திப்பு நடைபெற்றது.



***Jesus Dreamz இசைக்குழு***

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தில் செயல்படும் Jesus Dreamz இசைக்குழுவினரின் தலைமையில் 2023 பிப்ரவரி 26 அன்று மாலை 6.00 மணிக்கு தவக்காலத்தை முன்னிட்டு தெற்றிவிளை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் Taize Prayer நடைபெற்றது.

***இவண்***
***மெரின் சுஜித், செயலர்***




***இல்வாழ்வு இயக்கம்***

உள்ளார்ந்த அன்பு, புரிந்து கொள்ளுதல், நம்பிக்கை இம்மூன்றும் திருக்குடும்பத்தில் காணப்பட்டது. இம்மூன்றும் நமது குடும்பங்களில் கொண்டு வர இல்வாழ்வு இயக்கம் குடும்பங்களுக்கு ஒரு வழிகாட்டியாக செயல்பட்டு வருகிறது. இன்றைய காலகட்டத்தில் குடும்பத்தில் பணமோகமும், வாழ்க்கையில் அந்தஸ்து மோகமும் கலாச்சார பாதிப்பு ஆகியவை ஏற்பட்டிருக்கின்றன. இணையதள பயன்பாட்டால் கணவனுக்கும் மனைவிக்கும் மத்தியில் ஏற்படும் பிரிவினைகளால், பிள்ளைகளின் பண்புநலன் பாதிக்கப்பட்டு மன உளைச்சலுக்கு உள்ளாகி குடும்பங்களில் பிரச்சனை அதிகரிக்கிறது. இதனைச் சரி செய்ய நமது இல்வாழ்வு இயக்கத்தில் ஆற்றுப்படுத்தல் (counselling) நடைபெற்று வருகிறது. அதனை அருட்தந்தை மற்றும் அருட்சகோதரி ஆகியோர் நடத்தி வருகின்றனர்.

***மாதர் ஜோதிஸ் இயக்கம்***

தாய்மார்கள் திருவிவிலியத்தை நன்கு படித்து இறைவழியில் குடும்பங்களை கொண்டுச் சொல்ல வேண்டும் என்னும் நோக்குடன் இறைவார்த்தை எழுதும் போட்டி படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் வைத்து பிப்ரவரி



5 ஆம் தேதி நடைபெற்றது. இப்போட்டியில் மறைமாவட்ட அளவில் தாய்மார்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் 116 இறைவசனங்களை எழுதி படந்தாலுமூடு திருஇருதய ஆலயத்தைச் சேர்ந்த மரிய வனஜா அவர்கள் மறைமாவட்ட அளவில் முதலிடத்தையும் 113 இறைவசனங்களை புனித சூசையப்பர் ஆலயம் சூசைபுரத்தைச் சேர்ந்த ஜீவிதா அவர்கள் எழுதி மறைமாவட்ட அளவில் இரண்டாவது இடத்தையும், 110 இறைவசனங்களை எழுதி சுனிதா மேரி மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளனர். அவர்களுக்கு மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

18.2.2023 அன்று கல்லுவிளை இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து மாதர் ஜோதிஸ் மறைவட்ட பொறுப்பாளருக்கான கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை இயக்குநர் தந்தை அவர்கள் தலைமை ஏற்று வழிநடத்தினார். இக்கூட்டத்தில் வருகின்ற போட்டிகள் மற்றும் ஆண்டுவிழாவை குறித்து பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. சுமார் 4.00 மணியாளவில் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான விவிலிய வினாடி - வினா போட்டி 19.2.2023 அன்று படந்தாலுமூடு, திரு இருதய ஆலயம் வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இப்போட்டியில் 79 தாய்மார்கள் தேர்வு எழுதினர். மறைவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

26.2.2023 அருட்சகோதரி றோஸ் சீரியன்கண்டத் CHF அவர்கள் புனித மத்தேயு ஆலயம் அண்ணிக்கரை பங்கு தளத்தில் உள்ள மாதர் ஜோதிஸ் தாய்மார்களை சந்தித்து அவர்களுக்கு திருச்சபையில் தாய்மார்களின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் குறித்து வகுப்பு நடத்தினார். இக்கூட்டத்தில் சுமார் 30 தாய்மார்கள் கலந்து கொண்டனர்.



மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக களியல் மற்றும் ஆறுகாணி மறைவட்டத்தில் 26.2.2023 அன்று இயக்குநர் தந்தை வழிநடத்துதலில் மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு களியல், தூய மரியன்னை ஆலயத்தில் வைத்து 26.2.2023 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் மாதர் ஜோதிஸ் தாய்மார்களின் கருத்துகள் திருப்பலியில் ஒப்புக்கொடுத்து ஜெபம் செய்யப்பட்டது. பிற்பகல் 2 மணிக்கு கூட்டம் தொடங்கியது. இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக அருட்தந்தை செபாஸ்டியன் லெட்டியப்பறா (Director of Family Apostolate, Thalassery) அவர்கள் வருகைப்புரிந்தார்கள். அருட்தந்தை செபாஸ்டியன் லெட்டியப்பறா அவர்கள் தாய்மார்களுக்கு வகுப்பு நடத்தினார். மேலும் இக்கூட்டத்தில் களியல் பங்குதந்தை பேரருட்தந்தை டினு மற்றும் இல்வாழ்வு இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் ஆகியோர் உரையாற்றினர். இக்கூட்டமானது சுமார் 4 மணியாளவில் நிறைவுற்றது. இக்கூட்டத்தில் ஏறக்குறைய 150 தாய்மார்கள் கலந்து கொண்டனார்.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***

---

# வரவிருக்கும் நிகழ்வுகள்

மறைவட்ட முதன்மைப்பணியாளர்கள் கூட்டம் - மார்ச் 13

அருட்தந்தையர்களுக்கான திருத்தப்பட்ட வழிபாட்டு முறை பயிற்சி - மார்ச் 14

குருக்களுக்கான கூட்டம் - மார்ச் 20

(சூசைபுரம், தக்கலை - பிலாங்காலை மறைவட்டம்)

குருக்களுக்கான கூட்டம் - மார்ச் 21

(படந்தாலுமூடு, நித்திரவிளை மறைவட்டம்)

குருக்களுக்கான கூட்டம் - மார்ச் 22

(ஆறுகாணி, மஞ்சாலுமூடு, களியல் மறைவட்டம்)

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

***Talent Fest-2023***

மாற்றுத்திறனாளிகளின் கல்வி, நல்வாழ்வு, மறுவாழ்வு, பாதுகாப்பு ஆகியவற்றை அரசு கவனத்தில் கொண்டுள்ளது. இதற்கேற்றப்படி தக்கலை மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் சிறப்பு பள்ளிகள் ஒருங்கிணைக்கப்பட்டு கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் AIDACT என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

சிறப்பு பள்ளி மாணவர்களின் திறமையை வளர்க்க இந்த ஆண்டிற்கான கலைவிழா Talent Fest-2023 எனும் தலைப்பில் பிப்ரவரி 3 ஆம் தேதி கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் இயக்குநர்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதனை முளகுமூடு பஞ்சாயத்து தலைவர் திருமதி அனுஷியா அஜித் அவர்கள் குத்து விளக்கேற்றி துவங்கி வைத்தார்கள். இதில் 7 சிறப்பு பள்ளிகளிலிருந்து 142 மணவர்கள் கலந்து கொண்டனர்.

பேச்சுப்போட்டி, நடனப்போட்டி மற்றும் ஆசிரியர்களுக்கான குழு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இறுதி நிகழ்வு KKSSS தலைவர் மற்றும் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் குமரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. பரந்தாமன் அவர்கள் பேசும் போது 'நீங்கள் அதிர்ஷ்டசாலிகள், என்றுமே குழந்தையாக இருக்கும் வரம் இவர்களுக்கு கிடைத்துள்ளது. மனித பார்வையில் மட்டுமே நீங்கள் மாற்றுத்திறனாளிகள் இறைவனின் முன்னிலையில் நீங்கள் மணிமகுடமாய் இருப்பீர்கள். இந்த நிகழ்வு மேலும் உங்களை மெருகூட்டி மகிழ்ச்சிப் படுத்தும்' என கூறினார். மேலும் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளை பாராட்டி பரிசுகளை வழங்கினார். இதில் ராஜா கல்லூரிகளின் சேர்மன் முனைவர் ஜேக்கப் ராஜா மற்றும் AIDACT இயக்குனர் பேரருட்தந்தை. ஜோஸ் முட்டத்துப்பாடம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இதில் KKSSS அலுவலகப்பணியாளர்கள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

### ஆரி மற்றும் தையற்கலை

KKSSS சார்பில் ஆரி மற்றும் தையற்கலை ஒரு மாத முழு நேர பயிற்சி முகாம் நிறைவு விழா காட்டாத்துறையில் பிப்ரவரி 15 தேதி முதல் நடைபெற்றது. இது KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆன்றணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவர் பேசுகையில் 'தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் கணவனின் வருமானம் போதாத நிலையில், குடும்பத்தில் பணம் சார்ந்த பிரச்சனைகள் இருக்கும். இந்த நிலையில் ஒரு மாத கால ஆரி கலைப் பயிற்சியை பெற்று, அதன் மூலமாக வருமானத்தை பெற்று, தன் குடும்பத்தை எளிய முறையில் நடத்தி, அதில் வெற்றி பெற வைப்பதே இதன் நோக்கம். இன்றைய சுய வேலை வாய்ப்புக்கு இந்த கலை ஏற்றதாகவும், ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் செலவழிக்கவும், பெண்களுக்கு உகந்தத் தொழில். ஓய்வு நேரத்தை வீணாக கழிக்காமல் ஒரு மாதப் பயிற்சி வருவாய் ஈட்டி குடும்ப செலவை சரி செய்வதாக அமையட்டும்' என கூறினார். காட்டாத்துறை புனித மிக்கேல் ஆலய பங்கு தந்தை அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தையற் மற்றும் ஆரி கலை ஆசிரியர். ஸ்ருதி அவர்கள் 22 நபர்களுக்கு பயிற்சி அளித்தார்.

### பனையோலைப் பொருட்கள்

பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக இயற்கையை பாதுகாக்கும் பொருட்டும் பனையோலைப் பொருட்களை பாதுகாக்கும் எண்ணத்திலும் பனையோலை கைவினை பயிற்சி முகாம்; பத்துகாணி - மருதம்பாறை புனித அந்தோணியார் அரங்கத்தில் வைத்து பிப்ரவரி 1 தேதி முதல் நடைபெற்று வருகிறது. KKSSS இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் வழிகாட்டுதலில் KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆன்றணி அவர்கள் பயிற்சியினை தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில் 'முற்காலத்தில்



கருப்பட்டி, அரிசி முதலிய தானியம் என அனைத்துப் பொருட்களையும் சேமித்து வைக்க பனையோலைப்பெட்டிகள் பயன்பட்டன. இதன் அளவை பொறுத்து பெட்டகம், கடவம், ஈக்காம் பொட்டி போன்ற பல பெயர்கள் உண்டு. இன்று தரமான பனையோலைப்பொட்டிகள் அழகுப்படுத்தப்பட்டு விற்பனைச் செய்யப்படுகிறது. இந்தச் சிறு முயற்சி இயற்கை பாதுகாக்கும் ஓர் முயற்சி' எனக் கூறினார். இதில் 22 நபர்கள் பயிற்சிப் பெற்று வருகிறார்கள்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

| FEASTDAYS OF REV. FATHERS - MARCH 2023 | |
|---|---|
| Fr. Ajin Jose | 19 |
| Fr. Akash Keeranchira | 19 |
| Fr. Benny Thattamparampil | 19 |
| Fr. Dency Mundunadackal | 19 |
| Fr. Ginoy Thottiyil | 19 |
| Fr. Jimmy Thekkekadumathil | 19 |
| Fr. Jinu Thekkethalackal | 19 |
| Fr. Jogy Marangattu | 19 |
| Fr. Jomon Mangalamadom | 19 |
| Fr. Jose Kanachikuzhiyil | 19 |
| Fr. Jose Muttathupadom | 19 |
| Fr. Jose Vayalil | 19 |
| Fr. Joseph Anithottam CMI | 19 |
| Fr. Joseph Santhosh | 19 |
| Fr. Josy Puthenpurackal | 19 |
| Fr. Lins Kurumpanavalayil CMI | 19 |
| Fr. Prince Maliyil | 19 |
| Fr. Printo Kurias | 19 |
| Fr. Reju puthuparampil MCBS | 19 |
| Fr. Robin Jose | 19 |
| Fr. Sajan Nettaponghu | 19 |
| Fr. Toji Kozhuvakandathil | 19 |
| Fr. Vinu D Joseph | 19 |




# வின்சென்ட்-தே-பவுல் சபை

### *சூசைபுரம் வட்டார சபை வெள்ளிவிழா மற்றும் ஆண்டு விழா*

சூசைபுரம் வட்டார சபையின் வெள்ளிவிழா மற்றும் ஆண்டு விழாவானது புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம், சூசைபுரத்தில் வைத்து 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அருட்தந்தை சாஜன்நெட்டபொங்கு அவர்களால் நடத்தப்பட்ட நற்கருணை ஆராதனையுடன் தொடங்கியது. தொடர்ந்து விவிலியமானது பவனியாக ஆலயத்திலிருந்து பொதுகூட்ட அரங்கத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. பொதுக்கூட்டமானது பிற்பகல் 2.45 மணிக்கு சூசைபுரம் புனித வின்சென்ட் தே பவுல் வட்டார சபை ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களது தலைமையில் தொடங்கியது. கூட்டத்தின் தொடக்கத்தில் தூய ஆவியார் பாடலானது தக்காளிவிளை திருகுடும்ப ஆலய வின்செந்தியர்களால் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து வட்டார சபைத் தலைவர் சகோ. பிரபு அவர்களால் வரவேற்புரை கூறப்பட்டது. தொடர்ந்து விழாத் தலைவர்களால் குத்துவிளக்கு ஒளிர்விக்கப்பட்டது. சூசைபுரம் வட்டார சபை ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை. ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் கூறுகையில் 'வின்செந்திய பணியானது ஏழைகளுக்கு உதவும் பணி. இது இறைவனுக்கு உதவுவதாகும். அதற்காக இருப்பவர்களிடமிருந்து பெற்று இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும்' என்றுக் கூறினார்கள். அதனைத் தொடர்ந்து தக்கலை மத்திய சபை தலைவர் சகோ. றாபி அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். அவர் கூறுகையில்



புனித வின்சென்ட் தே பவுல் அவர்களின் வாழ்க்கையைக் குறித்தும் அவர் ஆற்றிய பணிகளைக் குறித்தும் விளக்கினார்கள். தொடர்ந்து அருள்தந்தை சாஜன் அவர்கள் கூறுகையில், 'வின்செந்திய உதவிகளை ஏழைகளுக்கு பகிர்ந்தளித்தல், நோயாளிகளை சந்தித்தல், வீடு சந்தித்தல் போன்றவை நடத்த வேண்டும் என்று கூறினார். தொடர்ந்து தக்கலை மத்திய சபை துணைத் தலைவர் சகோ. கிறிஸ்துதாஸ் ஐயாத்துரை அவர்கள் சிறப்புரையாற்றினார். இன்று வின்செந்தியர்கள் மேற்கொள்ளுகின்ற சிறப்புப் பணிகளைக் குறித்து விளக்கினார்கள். அதனைத் தொடர்ந்து வட்டார சபையின் கீழ் இயங்கி வரும் கிளைச் சபைகள் சார்பாகக் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. தொடர்ந்து வின்செந்திய பணியில் 25 மற்றும் 50 வருடம் நிறைவு செய்தவர்களின் சேவையை பாராட்டி கிளைச்சபை வின்செந்தியர்களுக்கு சூசைபுரம் வட்டார சபை ஆன்மீக ஆலோசகர், பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார். அதனைத் தொடர்ந்து வெள்ளிவிழா வின்செந்திய வினாடி வினா போட்டிக்கான பரிசுகளை தக்கலை மத்திய சபைத் தலைவர் சகோ. றாபி மற்றும் தக்கலை மத்திய சபை துணைத் தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்களால் வழங்கப்பட்டது. தொடர்ந்து புனித வின்செந்தே பவுல் சபை சார்பாக வீடு கட்ட உதவி, மருத்துவ உதவி மற்றும் கல்வி உதவி போன்றச் சிறப்பு உதவிகள் வழங்கப்பட்டன. இந்த உதவிகளை பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ், அருட்தந்தை. ஜோஸ்மோன் பால் புரையிடத்துகுன்னேல், அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு மற்றும் SABS துறவர சபையின் துணைத் தலைவி அருட்சகோதரி ஆன்ஷிட் அவர்களால் பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சூசைபுரம் வட்டார சபை பொருளாளர் சகோ. ராபின் ஜோசப் அவர்கள் நன்றியுரை கூற பாப்பரசர் கீதத்துடன் விழாவானது இனிதே நிறைவுற்றது.

### *திட்டம் வழங்குதல்*

மஞ்சாலுமூடு வட்டார சபைக்கு உட்பட்ட மஞ்சாலுமூடு சிறுமலர் ஆண்கள் கிளை சபை சார்பாக, ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் முன்னிலையில் 25.2.2023 அன்று மூன்று ஏழைக் குடும்பங்களுக்கு சுழற்சி முறையில் ஆடு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் வட்டார தலைவர் சகோ ஜார்ஜ் வின்சென்ட் மற்றும் கிளை சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள்.

***தகவல் சேகரிப்பு***

***D. P. ஷாஜி, தகவல் தொடர்பு அலுவலர்***

# தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

***உலக நோயாளர் தினம்***

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 11 ஆம் நாள் உலக நோயாளிகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு சார்பில் நெய்யூர் புற்று நோய் மருத்துவமனையில் பிப்ரவரி 12 ஆம் நாள் அன்று உலக நோயாளிகள் தினம் கொண்டாடப்பட்டது. தக்கலை மறைமாவட்ட ஆயரும் தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழுத் தலைவருமான மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் உலக நோயாளிகள் தின கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி சிறப்புரையாற்றினார். திருத்தந்தையின் ஆலோசனையின் படி இந்த வருடம் உங்களோடு இணைந்து இவ்விழாவை கொண்டாடுவதில் மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைவதாக குறிப்பிட்டார். முன்னதாக பேசிய தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு இயக்குனர் அருட்தந்தை மகேஷ் நோய்வாய்ப்பட்டவர்களுக்காக எல்லா திருப்பலிகளிலும் ஒவ்வொரு அருட்பணியாளர்களும் செபிப்பதாகவும் இறைவனின் உடனிருப்பை உணர்த்துவதற்கவே இந்த விழா இன்று இங்கு நடைபெறுவதாகவும் குறிப்பிட்டார். தொடர்ந்து வளன் நகர் ஆலய இளையோர் செபவழிபாட்டை நடத்தினர். செல்வி சிசிலா விவிலியம் வாசித்தார். செல்வி அனிதா மன்றாட்டை ஏறெடுக்க ஆயர் நோயாளிகளுக்காக செபித்து ஆசி வழங்கினார். நிகழ்வில் "இதயம் காப்போம்" என்ற மையச்சிந்தனையில் வாறுதட்டு மார் மாத்தியு காவுக்காட் உயர்நிலைப் பள்ளி மாணவிகளின் நடனம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக டாக்டர் ஆஷீனா அவர்கள் கலந்து கொண்டார். தொடந்து ஆயர் அவர்கள் 50 நோயாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வை அருட்தந்தை மகேஷ் அவர்கள் ஒருங்கிணைத்தார். இதில் மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு உறுப்பினர்கள் அருட்சகோ. சஜிதா, அருட்சகோ. தேஜஸ்வி, திரு. அஜின், திரு. இராஜசேகரன் திரு. பிரவீன், டாக்டர் பியூலின் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

***அருட்சகோதரி. டயானா SDS***
***செயலர்***

## தக்கலை இளையோர் கல்வி பணியகம்
## Thuckalay Youth Educational Services
in Collaboration with Trichy Don Bosco Vazhikatti

### *தன்னார்வலர்களுக்கான பயிற்சி வகுப்புகள்*

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் நடுவண் செயற்குழு மற்றும் தலைமைத்துவ பயிற்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வலர்களுக்கான பயிற்சி 2023 பிப்ரவரி 12 ஞாயிற்றுகிழமை, மதியம் 2 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட SMYM இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் ஜெபம் செய்து நிகழ்வை தொடங்கி வைத்தார். திருச்சி டோன் போஸ்கோ வழிகாட்டி இயக்குனர் அருட்தந்தை அருள் ஆண்டனி SDB அவர்கள் இந்நிகழ்வை வழிநடத்தினார். இதில் அடுத்து வரவிருக்கின்ற நிகழ்வுகளுக்கான பயிற்சி மற்றும் அதற்கான தரவுகள் பகிர்ந்ளிக்கப்பட்டன. இறுதியில் தக்கலை மறைமாவட்ட SMYM துணைத் தலைவர் அஞ்சனா அனைவருக்கும் நன்றி கூறினார். பயிற்சி வகுப்பில் மறைமாவட்டத்தை சார்ந்த 12 இளையோர்கள் கலந்து கொண்டனர்

### *வாழ்க்கை வழிகாட்டி முகாம்கள்*

பிப்ரவரி மாதம் 13 தேதி காலை 10 மணி அளவில் கிறிஸ்துராஜபுரம் ஜெயமாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டி முகாம் நடைபெற்றது. திருச்சி டோன் போஸ்கோ வழிகாட்டி இயக்குனர் அருட்தந்தை அருள் ஆண்டனி SDB அவர்களால் வழிநடத்தப்பட்டது. படிப்பதற்கான பழக்கவழக்கங்கள், சிறப்பாக தேர்வு எழுதுவது, இலக்கை தேர்வு செய்வது குறித்த வகுப்புகள் நடைபெற்றன. மதியம் 12.30 மணியளவில் வகுப்புகள் நிறைவடைந்தது. இதற்கான ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகம் சிறப்பாக செய்திருந்தது.





பிப்ரவரி மாதம் 16 தேதி காலை 10 மணி அளவில் களியல் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் மாணவ மாணவியர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டி முகாம் நடைபெற்றது. தலைமையாசிரியர் அருட்தந்தை டேவிஸ் கருகப்பள்ளி CMI தொடக்கவுரை வழங்கினார். டோன் போஸ்கோ வழிகாட்டி, கோயம்புத்தூர் மைய ஒருங்கிணைப்பாளர் திரு. ஹரிஷ் அவர்களால் முகாம் வழிநடத்தப்பட்டது. இலக்கைத் தேர்வு செய்வது, எப்படிப்பட்ட உயர்கல்வியை தேர்வு செய்வது, கல்லூரி கட்டண விவரங்கள் குறித்த வகுப்புகள் நடைபெற்றன. மதியம் 12.30 மணியளவில் வகுப்புகள் நிறைவடைந்தன. இதற்கான ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகம் சிறப்பாகச் செய்திருந்தது.

தக்கலை மறைமாவட்டத்தில் 10, 11 மற்றும் 12 படிக்கின்ற மாணவர்களுக்காக வாழ்க்கை வழிகாட்டுதல் மற்றும் திறன் வளர் பயிற்சி, பிப்ரவரி 18 சனிக்கிழமை நடைபெற்றது. படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளை மறைவட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு படந்தாலுமுடு திருஇருதய ஆலயத்தில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையும். ஆறுகாணி, மஞ்சாலுமூடு, மற்றும் களியல் மறை வட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு உத்திரங்கோடு ஓசானாம் உயர் கல்வி நிறுவனத்தில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையும். தக்கலை பிலாங்காலை மற்றும் சூசைபுரம் மறை வட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு கல்லுவிளை SMYM அலுவலகத்தில் வைத்து பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 4.00 மணி வரையும் வகுப்புகள் நடைபெற்றது. இந்த பயிற்சி வகுப்புகளை அருட்தந்தை ஜெயன் SDB, திருச்சி டோன் போஸ்கோ வழிகாட்டி ஒருங்கிணைப்பாளர் திரு ராஜா, தக்கலை இளையோர் கல்வி பணியக தன்னார்வலர்கள் அஞ்சனா, ஜெசிலா மேரி, ஜெனிகா ஆகியோர் வழிநடத்தினர். இதற்கான ஏற்பாடுகளை தக்கலை மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.



***சஜின்,***

***ஒருங்கிணைப்பாளர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து

***"உங்கள் பாவங்கள் போக்கப்படும்பொருட்டு மனம்மாறி அவரிடம் திரும்புங்கள்" [தி.பணி 3 : 19]***

தவக்காலத்தின் ஆரம்பமாகிய சாம்பல் திங்கள் அனைத்து குருமடங்களிலும் கொண்டாடப்பட்டது. அன்றைய நாள் அனைத்து குருமடங்களிலும் ஒருசந்தி நாளாக அனுசரிக்கப்பட்டது. மேய்ப்புப் பணி பயற்சிக்காக சென்ற சகோதரர்கள் தங்கள் பணிகளை கடந்த மாத இறுதியில் சிறப்பாக நிறைவு செய்தார்கள். அந்தந்த பங்குகளிலிருந்து நன்றிபூர்வமான முறையில் பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது. அனைத்து குருமடங்களிலும் தேர்வுகள் ஆரம்பமாக உள்ளன. சகோதரர்கள் தேர்வுக்காக ஆயத்தமாகி கொண்டிருக்கிறார்கள்.

நமது மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் பூந்தமல்லி திருஇதய குருத்துவக்கல்லூரிக்கு வருகை தந்தார்கள். அனைத்து அருட்தந்தையர்களும் சகோதரர்களும் வரவேற்பு அளித்தனர். அனைத்து சகோதரர்களையும் தனிப்பட்ட முறையில் சந்தித்து அறிவுரைகளை வழங்கினார். மறைமாவட்டத்தின் தகவல்களையும் அடுத்கதக்கட்ட நிகழ்ச்சிகளை பற்றியும் சகோதரர்களுடன் பகிர்ந்து கொண்டார்.



தத்துவவியல் மற்றும் இறையியல் 3 ஆம் ஆண்டு பயிலும் சகோதரர்களுக்கான comprehensive தேர்வுகள் மிக விரைவில் நடைபெற உள்ளது. அவர்கள் தேர்வுக்கு தயாராகி வருகின்றனர்.

சகோ ஆன்டணி தகிடியேல்

# மறைமாவட்டச் செய்திகள்

## அருட்தந்தையர்களுக்கான தொடர் உருவாக்கப் பயிற்சி

தக்கலை மறைமாவட்ட அருட்தந்தையர்களுக்கான 2 நாள் தொடர் உருவாக்கப் பயிற்சி பிப்ரவரி மாதம் 06 மற்றும் 07 ஆகிய தேதிகளில் தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. அருட்தந்தை ஜெரி ரொசாரியோ SJ அவர்கள் இந்நிகழ்வை வழிநடத்தினார். முதல் நாள் மாலை 6.30 மணிக்கு குருக்களுக்கானக் கூட்டமும் நடைபெற்றது. தொடர்ந்து பிப்ரவரி 7 அன்று துறைகளுக்கிடையேயான கூட்டமும், கடந்த ஒரு வருடத்திற்கான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

## அருட்தந்தை பிலிப் கொடியந்தற 10 ம் ஆண்டு நினைவு தினம்.

அருட்தந்தை பிலிப் கொடியந்தற அவர்களின் 10ம் ஆண்டு நினைவு தினம் 2023 பிப்ரவரி 09 காலை 11.00 மணிக்கு காயல்புரத்தில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB திருப்பலி நிறைவேற்றினார். மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில், அருட்தந்தையர்கள், அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## தக்கலை புனித மரியன்னை ஆலய வெள்ளிவிழா

தக்கலை ஆயர் இல்ல புனித மரியன்னை ஆலய வெள்ளி விழா நிறைவுதின கொண்டாட்டம் 2023 பிப்ரவரி 12 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தலைமையில் அருட்தந்தை ஜியோ சூழிக்குந்நேல் மற்றும் அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். தொடர்ந்து வெள்ளிவிழா நிறைவுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் முன்னாள் பணியாளர்கள், அருட்சகோதரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## அருட்தந்தையர் சுற்றுலா

நமது மறைமாவட்ட அருட்தந்தையர்களின் இருநாள் சுற்றுலா பிப்ரவரி 13 மற்றும் 14 ஆகிய நாட்களில் நடைபெற்றது. தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் இரண்டு நாட்கள் இன்பச்சுற்றுலா சென்றனர்.

## ஒருநாள் நற்கருணை ஆராதனை – சூசைபுரம்

SABS அருட்சகோதரிகளின் நிறுவனர் தோமஸ் குரியாளச்சேரி அவர்களின் 150 வது பிறந்தநாளையொட்டி ஒருநாள் தியானம் பிப்ரவரி 18 சனிக்கிழமை, சூசைபுரம் SABS மகாண இல்லத்தில் நடைபெற்றது. அருட்தந்தை பெனடிக்ட் அனலின் தியானத்தை வழி நடத்தினார். தொடர்ந்து மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB திருப்பலி நிறைவேற்றினார். இதில் மறைமாவட்டத்தைச் சார்ந்த சுமார் 200 இறைமக்கள் கலந்து கொண்டனர்.

### அருட்சகோதரிகளுக்காக திருத்தப்பட்ட யாம செபங்கள் பயிற்சி

சீரோ மலபார் திருச்சபையின் வழிபாட்டு முறையில் திருத்தப்பட்ட ஜெபம் மற்றும் பாடல்களின் ஒரு நாள் பயிற்சி 2023 பிப்ரவரி 18 அன்று நடைபெற்றது. CRI தலைவர் அருட்சகோதரி சீலியா FCC அனைவரையும் வரவேற்றார். மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் நிகழ்வுகளை தொடங்கி வைத்தார். அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் வழிபாட்டு ஆணையத்தின் உரையை அறிமுகப்படுத்தி, புதிய முறையில் செய்யப்பட்ட மாற்றங்களையும் விளக்கிக் கூறினார். 40 அருட்சகோதரிகள் கலந்து கொண்டனர்.

### அருட்தந்தையர் பேரவைக் கூட்டம்

அருட்தந்தையர் பேரவையின் 4 வது பொதுக்குழு கூட்டம் 2023 பிப்ரவரி 25 அன்று தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. விரிவாக்கப்பட்ட திருத்தொண்டு நிலைய பணிகளின் முறைகள், சவால்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் வரவிருக்கின்ற நிகழ்சிகள் குறித்து எடுத்துக்கூறினார்.

### பாலப்பள்ளம் ஜோதி நிலைய வெள்ளிவிழா துவக்கம்

பாலப்பள்ளம், ஜோதி நிலைய மாற்றுத்திறனாளிகள் பள்ளியின் வெள்ளிவிழா தொடக்க நிகழ்வானது 2023 பிப்ரவரி 25 அன்று மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார். ஆலுவா மகாண பொது ஆலோசகர் அருட்சகோதரி எல்சா பைகட SABS சூசைபுரம் மகாணத்தலைவி அருட்சகோதரி ரோஸ் மார்டின் SABS ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளிமாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை முதல்வர் அருட்சகோதரி லின்ஸ் SABS அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்

### அருட்தந்தையர் இல்ல மந்திரிப்பு – தேனி

தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே சுங்கல்பட்டியில் திருத்தொண்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் அருட்தந்தையர் தங்குவதற்கான இல்லம் கட்டப்பட்டு அதன் மந்திரிப்பு 2023 பிப்ரவரி 26 மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் முன்னிலையில் காஞ்சிரப்பள்ளி ஆயர் மார் ஜோஸ் புலிக்கல் அவர்களால் அருட்தந்தையர் இல்லம் மந்திரிக்கப்பட்டது. இதற்கான கட்டுமான பணிகளை தேனி மறைபரப்புதள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை ஜோஸ் தட்டாம்பறம்பில் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

## இதர செய்திகள்

- அருட்தந்தை ஷிஜோ ஐக்கரகுந்நேல் சீரோ மலபார் திருச்சபையின் இறையியல் மன்ற தகவல் தொடர்பாளராக பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.
- அருட்தந்தை மிஜோ புத்தன்புரையில் மருத்துவ சிகிட்சைக்கு பின் முக்கூட்டுக்கல் இளம் குருமடத்தில் ஓய்வு எடுத்து வருகிறார்.
- மதுரை, புனித அல்போன்சா பல்நோக்கு அரங்கில் முதன்முறையாக தமிழ் திருப்பலி நடைபெற்றது. 2023 பிப்ரவரி 11 அன்று அருட்தந்தை பீட்டர் கிழக்கேயில் மற்றும் அருட்தந்தை ஜெபனேஷ் ஆகியோர் திருப்பலி நிறைவேற்றினர்.
- இராமநாதபுரம் மறைமாவட்டத்தை சார்ந்த 4 திருத்தொண்டர்கள் நமது மறைமாவட்டத்தில் களப்பணி முடித்து சொந்த மறைமாவட்டத்திற்கு திரும்பியுள்ளனர்.
- LSDP துறவறச்சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி ரோசிலி, 2023 பிப்ரவரி 28 அன்று தக்கலை ஆயர் இல்லத்தில் சந்திப்பு நடத்தினார்.

## தென்காசி மறைத்தள செய்திகள்

### உலக நோயாளர் தினம்

புலரி சமூக சேவை மையம் சார்பில் நடத்தப்பட்டு வருகின்ற படுக்கை நோயாளிகள் பராமரிப்பு வழியாக, நோயாளிகள் தின நாளில் நோயாளிகளின் வீடுகளில் சென்று சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவர்களுக்காக சிறப்பு செபங்களும் ஏறெடுக்கப்பட்டது.

உலக நோயாளிகள் தினத்தில் புளியறை ஆலயத்தில் நோயாளிகளுக்கான சிறப்பு ஆராதனை நடத்தப்பட்டது. தொடர்ந்து நோயாளிகளின் தலையில் கை வைத்து அருட்தந்தை டென்சி அவர்கள் செபங்கள் செய்தார்.




# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### புனித சூசையப்பர் ஆலயம் – வளன்நகர்

*19.2.2023* அன்று புதிய ஆலய அர்ச்சிப்பின் ஓராண்டு நினைவு நன்றித் திருப்பலியானது பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

*18.2.2023* அன்று தவக்காலத் தயாரிப்பாக நற்செய்திப்பகிர்வு மற்றும் பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது. நற்செய்திப் பகிர்வை திருத்தொண்டர் C.அஜின் அவர்கள் வழிநடத்தினார்கள்

## மஞ்சாலுமூடு

### புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு

புனித சாவரா குரியாக்கோஸ் எலியாஸ் அடிகளாரின் பிறந்தநாள் புனித தோமையார் ஆலயத்தில் திருவிழாவாக கொண்டாடப்பட்டது. *03.02.2023* முதல் *12.02.2023* வரை நடைபெற்ற இத்திருவிழாவில் ஒவ்வொரு நாளும் மாலை ஆடம்பர திருப்பலி மற்றும் நவநாள் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் CMI துறவற சபையில் உள்ள அருள் தந்தையர்கள் வருகை தந்து திருப்பலி மற்றும் நவநாள் சிறப்பித்தார்கள். *12.02.2023* திருவிழாவின் இறுதி நாளாகிய அன்று மாலை ஆடம்பர திருப்பலி, நவநாளுக்கு பின் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. இத்திருவிழாவை வழி நடத்தியவர் உதவி பங்குத்தந்தை அருட்தந்தை மேத்யூ CMI அவர்களாகும்.

### புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – தெற்றிவிளை

புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் தெற்றிவிளையில் *26.02.2023* அன்று மாலை *6* மணி முதல் தவகால தியானம் நடைபெற்றது. தியானத்தின் இடையில் பாவசங்கீர்த்தனம் வழங்ப்கபட்டது.



பங்கில் பொதுநிலையினர் பணிக்குழு தொடங்கப்பட்டது பொதுநிலையினர் பணிக்குழு தலைவர் திரு. தனசிங் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

## தக்கலை – பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை.

பிப்ரவரி 11 ம் நாள் அகில உலக நோயாளிகள் தின சிறப்புத் திருப்பலி மற்றும் நோயாளிகளுக்கான சிறப்பு ஜெபம் நடைபெற்றது. திருப்பலி முடிந்த உடன் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

20 ம் தேதி காலை 6 மணிக்கு சாம்பல் திங்கள் திருப்பலி நடைபெற்றது. தவக்காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு வியாழக்கிழமை மாலை 6 மணிக்குத் திருப்பலி, தொடர்ந்து நற்கருணை ஆராதனை மற்றும் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திருப்பலி தொடர்ந்து சிலுவைப் பாதையும் நடைபெற்று வருகிறது. அனைத்து வழிபாட்டு நிகழ்ச்சிகளும் பங்குதந்தை முன்னின்று நடத்தினார்.



### புனித ஜார்ஜியார் ஆலயம் – ஆனையடி

சாம்பல் திங்கள் திருநாள் மிகச்சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. மாலை 6 மணிக்கு பாவசங்கீர்த்தனம் தொடர்ந்து திருப்பலி நடைபெற்றது: தவக்காலத்தில் எல்லா புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு ஜெபமாலை திருப்பலி, வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனை வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி திருப்பலி மற்றும் சிலுவைப் பாதையும் நடைபெற்று வருகிறது.

### புனித சவேரியார் ஆலயம் – கைசாலவிளை

சாம்பல் திங்கள் அன்று மாலை 6 மணிக்கு திருப்பலி நடைபெற்றது. தவக்காலத்தை முன்னிட்டு புதன்கிழமை மாலை 6 மணிக்கு திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனை வெள்ளிக்கிழமை 6 மணிக்கு திருப்பலி மற்றும் சிலுவைப் பாதை நடைபெற்று வருகிறது.

### தூய மிக்கேல் அதிதூதர் மறைபரப்புதளம் – வெள்ளாம்பிமலை

*26.02.2023* அன்று MMI துறவற சபையை சார்ந்த இரண்டு அருட்சகோதரிகள் திருத்தொண்டு நிலையத்தை பார்வையிட்டார்கள். இதில் இத்திருத்தொண்டுதளம் தொடங்க உதவியாக இருந்த திரு. மரியதாஸ் அவர்கள் வருகை புரிந்தார்கள்.

### புனித சூசையப்பர் ஆலயம் – நீதிபுரம்

தடிக்காரன்கோணம் நீதிபுரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் சாம்பல் திங்கள் திருப்பலி நடைபெற்றது. அன்றைய தினம் அனைவரும் உபவாசம் இருந்து பாவசங்கீர்த்தனம் எடுத்து திருப்பலியில் கலந்து கொண்டனர்.

## களியல்

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

*2023* பிப்ரவரி *05* அன்று அருட்சகோதரி அகதா DSS அவர்களின் பெயர்கொண்ட விழா, அர்ப்பண வாழ்வின் நினைவு நாள் கொண்டாட்டம் நடைபெற்றது. காலை திருப்பலியைத் தொடர்ந்து, நடைபெற்ற நிகழ்வுகளில் கைக்காரர்கள் நினைவுப்பரிசு வழங்கினர். மறைக்கல்வி ஆசிரியர் வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளை மறைக்கல்வி ஆசிரியர்கள் ஒருங்கிணைத்திருந்தனர்.



**பிப்ரவரி *18* சகல ஆத்துமாக்கள் தினத்தை முன்னிட்டு, மாலை *5.30* மணிக்கு ஜெபமாலையும், ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது தொடர்ந்து கல்லறைத் தோட்டத்தில் ஆடம்பர ஒப்பீசு ஜெபம் நடைபெற்றது.**

**சாம்பல் திங்கள் நிகழ்வுகள் பிப்ரவரி *20* மாலை *6.00* மணிக்கு ஆரம்பமானது. இறைஇரக்கத்தின் ஜெபமாலையும், தொடர்ந்து திருப்பலியும், சாம்பல் பூசுதல் நிகழ்வும் நடைபெற்றது.**

### திரு இருதய ஆலயம் – பள்ளிக்கோணம்

*19.02.2023* அன்று தவக்கால சிறப்பு தியானம் நடைபெற்றது. மாலை 5 மணி அளவில் திருப்பலியைத் தொடர்ந்து தியானம் நடைபெற்றது. கிறிஸ்துவின் அன்பினைப் பெற நாம் என்ன செய்யவேண்டும் என்ற மையச்சிந்தனையில் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தின் இயக்குநர் அருட்தந்தை அனில்ராஜ் அவர்களால் நடத்தப்பட்டது. தொடர்ந்து நற்கருணை ஆராதனை நடைபெற்றது. பாடல் மற்றும் ஜெபநிகழ்வுகளை சகோதரர். ராஜன் அவர்கள் வழிநடத்தினார். இறுதியில் அன்பின் விருந்து நடைபெற்றது.



## தூசைபுரம்

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

நோயாளிகள் தினம் பிப்ரவரி 12ஆம் தேதி சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலையில் திருப்பலியும் அதனை தொடர்ந்து நோயாளிகளுக்காக சிறப்பு ஆராதனையும் நடைபெற்றது. அன்றைய தினம் பல படுக்கை நோயாளிகள் திருப்பலிக்கு அழைத்து வரப்பட்டனர். வர இயலாத நோயாளிகளுக்கு நற்கருணை அவர்கள் இல்லங்களுக்கு சென்று வழங்கப்பட்டது.

இறந்தோர் நினைவு தினமும் கல்லறை தோட்ட சிற்றாலைய ஆண்டு விழாவும் பிப்ரவரி 19ஆம் தேதி நடைபெற்றது. மாலை 5 மணிக்கு நடைபெற்ற திருப்பலியை மதுரை திருத்தொண்டுதள நிர்வாகி அருட்தந்தை ஜெபனேஷ் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்கள். பின்னர் இரவு 7 மணி அளவில் மெழுகுத்திரி ஏந்தி கல்லறை தோட்டம் நோக்கி பவனி நடைபெற்றது. தொடர்ந்து கல்லறை தோட்டத்தில் ஒப்பிசு சொல்லி ஜெபிக்கப்பட்டது. நிறைவாக அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. அனைத்து

ஏற்பாடுகளையும் பங்குத்தந்தை ஜாண்பால் அவர்களும் உறவிய பொறுப்பாளர்களும் இணைந்து செய்திருந்தனர். பிப்ரவரி 20 ஆம் தேதி விபூதி திங்கள் திருப்பலி மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது.

பங்கில் எல்லா ஞாயிற்றுக்கிழமையும் தலா மூன்று உறவியங்கள் வீதம் உறவிய கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தினந்தோறும் பங்கில் வாசிக்கப்படும் நற்செய்தி பகுதியை தனி நபர்களாக எழுதி பாதுகாக்கும் புதிய முயற்சி பங்களவில் சிறப்பாக நடைபெறுகிறது.

- **தூய பாத்திமா அன்னை ஆலயம் – பாத்திமாபுரம்.**

தூய பாத்திமா அன்னை ஆலயத்தில் சாம்பல் திங்கள் 20.02.2023 அன்று கொண்டாடப்பட்டது. அன்றைய நாளில் நமது ஆயர் அவர்கள் கலந்து கொண்டு திருப்பலி நிறைவேற்றி நெற்றியில் சாம்பல் பூசி தவக்காலத்தை தொடங்கி வைத்தார்கள். அன்றைய தினம் நடந்த அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

- **தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்**

05.02.2023 அன்று சிறப்பு நற்கருணை ஆராதனை, நற்கருணைப்பவனி மற்றும் அனைத்து மக்களின் நெற்றியில கைவைத்து தைலம் பூசி ஜெபிக்கும் நிகழ்வு நடைபெற்றது. மேலும் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் நற்கருணை ஆராதனை நடைபெற்று வருகிறது.

12.02.2023 அன்று பங்குதந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் தலைமையில் பங்குப்பேரவைக் கூட்டம் நடைபெற்றது. 18.02.2023 சனிக்கிழமை மாலை 5.45 மணிக்கு மறைக்கலவி ஆசிரியர்களின் கூட்டம் அருட்தந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் தலைமையில் நடைபெற்றது

## நித்திரவிளை

- **புனித ஜார்ஜியார் ஆலயம் – முஞ்சிறை**

பிப்ரவரி மாதம், முதல் வியாழன் காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை தொடர் செபமாலை வழிபாடு நடைபெற்றது. ஒவ்வொரு உறவியங்களாக ஜெபமாலை நடைபெற்றது. தொடர்ந்து மாலை 6 மணிக்கு திருப்பலியும் சிறப்பு நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. ஆராதனையை அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் வழிநடத்தினார்கள். பின்னர் சிறப்பு ஜெப வழிபாடு, நற்கருணை பவனி ஆகியவை நடை பெற்றது. இறுதியில் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. எல்லா வியாழக்கிழமையும் சிறப்பு நற்கருணை ஆராதனையும் நடைபெற்று வருகிறது. 17ம்

தியதி இறந்த ஆத்மாக்களுக்காக சிறப்புத் திருப்பலியும் ஒப்பீசும் நடைபெற்றது. பங்கு மக்கள் அனைவரும் கலந்துகொண்டனர். 20ம் தேதி காலை 6 மணிக்கு விபூதி திருநாள் திருப்பலியும் திருச்சடங்கும் நடைபெற்றது. அன்றிலிருந்து தவக்காலத்தை முன்னிட்டு எல்லா நாட்களும் ஆலயத்தில் சிலுவைப்பாதை நடைபெறுகிறது. எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6 மணிக்கு சிலுவைப்பாதை, திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனை நடைபெற்றுவருகிறது.

## புனித அந்தோணியார் ஆலயம் – வயலங்கரை

பிப்ரவரி மாதம் 11 ம் தேதி நோயாளிகள் தினம் கொண்டாடப்பட்டது. அதன் தொடர்சியாக 12 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை 18 நோயாளிகளை ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு ஒப்புரவு மற்றும் திவ்ய நற்கருணை வழங்கப்பட்டது. பின்பு பங்குத்தந்தை அவர்கள் நோயாளிகள் தலைமேல் கரம் வைத்து ஜெபித்து, ஜெபமாலையும் வழங்கினார்கள். இந்நிகழ்வுகள் அனைத்தையும் இளையோர் இயக்கமும் புனித வின்சென்ட்-தே-பவுல் சபை உறுப்பினர்களும் ஒருங்கிணைத்திருந்தனர். மாலை 3 மணிக்கு மகளிருக்கு மருத்துவர்



ஒருவரால் சிறப்பு பயிற்சி வகுப்பு நடைபெற்றது. ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

17 ம் தேதி இறந்த ஆன்மாக்களுக்காக சிறப்பு திருப்பலியும் ஒப்பீசும் நடைபெற்றது. அனைத்து மக்களும் வழிபாடுகளில் கலந்து கொண்டு ஜெபித்தனர். 20 ம் தேதி மாலை 6.30 மணிக்கு விபூதி திருநாள் திருப்பலி மற்றும் திருநிகழ்வுகள் நடைபெற்றது. அனைத்து பங்கு மக்களும் பங்கு கொண்டு தவக்காலத்திற்காக தங்களை தயார் படுத்திக் கொண்டனர்.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

| MONTHLY AGENDA – MARCH 2023 | | | |
|---|---|---|---|
| **DATE** | **DAY** | **TIME** | **EVENTS** |
| 2 | Thu | 02.00 pm | KKSSS: Women's Day celebration at Kalluvilai & Karode,<br>CTWCC Training |
| 3 | Fri | | Sinai: One day Convention at Vattakottai<br>KKSSS: CTWCC Training |
| 4 | Sat | 11.00 am<br>02.00 pm | KKSSS: Women's Day celebration at Pilankalai<br>KKSSS: Women's Day celebration at Kattathurai & Kazhuvanthittai<br>KKSSS: Educare Students interview |
| 5 | Sun | 10.30 am<br>02.00 pm<br>03.00 pm<br>07.00 pm | SMYM: Unit Visit – Killiyoor, Kudukachivilai, Palapallam<br>CAT: BTCT Batch 2 at Padanthalumoodu<br>KKSSS: Women's Day celebration at Varuthattu<br>KKSSS: Women's Day celebration at Annikarai<br>MIG: Online Core Group Meeting |
| 6 | Mon | 02.00 pm<br>03.00 pm | KKSSS: Women's Day celebration at Mathapuram<br>KKSSS: Women's Day celebration at Padanthalumoodu |
| 7 | Tue | 09.30 am<br>02.00 pm | SMYM: Public Speaking Training & Youcat Book workshop at Kalluvilai<br>KKSSS: Women's Day celebration at Muzhucode |
| 8 | Wed | 11.00 am<br>02.00 pm | KKSSS: Women's Day celebration at Marapady & Kaliyal<br>KKSSS: Women's Day celebration at Mukootukal & Munchirai |
| 9 | Thu | 02.00 pm<br>03.00 pm | KKSSS: Women's Day celebration at Soosaipuram<br>KKSSS: Women's Day celebration at Malaicode |

| | | | |
|---|---|---|---|
| 10 | Fri | 09.30 am<br><br>02.00 pm | FA: Marriage Preparation Course at Kalluvilai<br>KKSSS: Women's Day celebration at Pathukani |
| 11 | Sat | 09.30 am<br><br>02.00 pm | FA: Marriage Preparation Course at Kalluvilai<br>KKSSS: Women's Day celebration at Killyoor<br>Sinai: One day Convention - Padanthalumoodu Forane<br>KII: Animators Meet at Kalluvilai<br>SMYM: Central Executives and Retreat Core Team Meeting at Kalluvilai |
| 12 | Sun | 10.30 am<br>02.00 pm<br><br>03.00 pm | SMYM: Unit Visit – Thakkalivilai, Mathapuram<br>CAT: BTCT Batch 2 at Padanthalumoodu<br>KKSSS: Women's Day celebration at Nithiravilai<br>MJ: Women's Day Celebration – Soosaipuram Forane<br>KKSSS: Women's Day celebration at Thuckalay & Anjugramam |
| 13 | Mon | 08.30 pm | Online: Forane Vicars meeting |
| 14 | Tue | 09.30 am | KKSSS: Educare Class<br>New Liturgy of Hours practice for Presbyterium |
| 16 | Thu | 04.00 pm | Anayadi: School Annual day Celebration |
| 17 | Fri | 05.00 pm | Thenkasi: New Liturgy of Hours practice and Mission meeting |
| 18 | Sat | | Sinai: One day Convention – Kaliyal & Soosaipuram Forane |
| 19 | Sun | 10.00 am<br><br>07.00 pm | SMYM: Unit Visit – Kaisalavilai, Anaiyadi, Paraicode<br>CAT: BTCT Batch 2 at Padanthalumoodu<br>FA: Tanthayar Nalvalvu Iyakam Celebration at Malaicode<br>MIG: Online Fancy Dress Competition |

| | | | |
|---|---|---|---|
| 20 | Mon | 02.00 pm | Kayathar: Blessing of Chapel and Convent |
| 24 | Fri | 02.00 pm | Seminar on NEP for School Correspondents and Superiors at Sangamam |
| 25 | Sat | 02.00 pm<br>09.30 am | CAT: HM Meeting at Kalluvilai<br>Sinai: One day Convention at Retreat Centre |
| 26 | Sun | 10.30 am<br>02.00 pm<br>03.00 pm | SMYM: Unit Visit – Thuckalay, Plankalai, Kattaturai<br>CAT: BTCT Batch 2 at Padanthalumoodu<br>Health: Organ Donation Awareness Seminar at Mukootukal<br>LC: Manjalumoodu Forane Meeting |
| 29 | Wed | 03.00 pm | Karunai Illam Annual Day at Nithravilai |
| 30 | Thu | 03.00 pm | Arukani: Primary School annual Day |
| 31 | Fri | 07.30 pm | MIG: Online Way of The Cross |

Fr.Thomas Powathuparampil, Protosyncellus

---

| BIRTHDAY OF REV. FATHERS- MARCH - 2023 | |
|---|---|
| Fr. Joseph Santhosh | 03 |
| Fr. Lins Kurumpanavalayil CMI | 03 |
| Fr. Mathew Thekkekutt | 15 |
| Fr. Thomas Powathuparampil | 15 |
| Fr. Sinoy Panackachalil MCBS | 19 |
| Fr. Thomas Sathianesan | 20 |
| Fr. Benny Thattamparampil | 25 |

## BISHOP'S ENGAGEMENTS - MARCH 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | 10.00 am | Taksa Translation |
| 2 | Thu | 10.00 am<br>03.00 pm | Taksa Translation<br>Meeting with Diocese Schools Correspondents |
| 3 | Fri | 10.00 am<br>03.30 pm | Taksa Translation<br>Bishop's House: Meeting for ONTIPPU, UCC monthly news letter |
| 4 | Sat | 10.00 am | Taksa Translation |
| 5 | Sun | 07.00 am | Killiyoor: Holy Qurbana |
| 6 | Mon | 10.00 am<br>03.30 pm | Taksa Translation<br>Kottar: UCC Governing Body meeting |
| 7 | Tue | 10.00 am<br>04.00 pm | Taksa Translation<br>Meetings with Deacons and their parents |
| 8 | Wed | 10.00 am<br>04.00 pm | Taksa Translation<br>Bishop's House: Meeting with Directors of Garment units |
| 9-10 | Thu | 10.00 am | Taksa Translation |
| 11 | Sat | 11.00 am | Thruthi: First Death Anniversary Holy Qurbana |
| 12 | Sun | 11.00 am | Koratty, Annamanada: Baptism Holy Qurbana |
| 13 | Mon | 10.00 am<br>08.30 pm | Taksa Translation<br>Online: Forane Vicars meeting |
| 14 | Tue | 09.30 am | New Liturgy of Hours practice for Presbyterium |
| 15 | Wed | 09.30 am | Meeting with Rev. Fathers |
| 16 | Thu | 09.30 am<br>04.00 pm | Meeting with Rev. Fathers<br>Anayadi: School Annual day Celebration |

| | | | |
|---|---|---|---|
| 17 | Fri | 05.00 pm | Thenkasi: New Liturgy of Hours practice and Mission meeting |
| 18 | Sat | 08.00 am<br>03.00 pm | Mission visit: Thirunelveli, Kayathar, Madurai<br>>> Dharmapuri |
| 19 | Sun | 09.00 am | Dharmapuri : Holy Qurbana and Health commission meeting |
| 20 | Mon | 10.00 am | Mukkoottukal: Minor seminary visit |
| 21 | Tue | 02.00 am | >> Trichy |
| 22 | Wed | 10.00 am | Trichy: Meeting of Tamil Nadu Bishops and Major Religious superiors |
| 23 | Thu | 03.00 am<br>05.00 pm | Kayathar: Blessing of Chapel and Holy Qurbana<br>Kayathar: Blessing of Convent |
| 24 | Fri | 02.00 pm | Sangamam: Seminar on NEP for School Correspondents and Superiors |
| 25 | Sat | 10.00 am<br>04.00 pm | Kalluvilai: Meeting of Catechism Headmasters and Award giving ceremony<br>Kurusumalai: Holy Qurbana >> Vellore |
| 26 | Sun | 09.00 am | Vellore: Holy Qurbana and Health commission meeting |
| 27 | Mon | | >> Thuckalay |
| 28 | Tue | | Bishop's House |
| 29 | Wed | 03.00 pm | Nithravilai: Karunai Illam Annual Day |
| 30 | Thu | 10.00 am<br>03.00 pm | Alphonsa College:National Conference of English department<br>Arukani: Primary School annual Day |
| 31 | Fri | 05.00 pm | Malaicode: Holy Qurbana and way of the cross |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**



SMYM, RESOURCE TEAM TRAINING, SMYM OFFICE, KALLUVILAI, 12.02.2023



KKSSS, TALENT FEST, KALLUVILAI 03.02.2023



PRESBYTERY BLESSING, THENI, 26.02.2023



ST. MARY'S CHURCH, THUCKALAY,
SILVER JUBILEE, 12.02.2023



ASH MONDAY CELEBRATION, KUDUKACHIVILAI,
20.02.2023

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570